(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 116.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2021 நவம்பர் 24, புதன்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

74/2020

கௌரவ ஹேஷா விதானகே,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எனினும், இதுவரை தீர்ப்பு வழங்கப்படாதுள்ள மனித உரிமை வழக்குகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) உயர் நீதிமன்றத்தில் அத்தகைய வழக்கு ஒவ்வொன்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ள திகதி தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அத்தகைய வழக்கு ஒவ்வொன்றுக்குமான வழக்கிலக்கம் மற்றும் மனுதாரர்கள் தனித்தனியாக யாவர் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

742/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— பிரதம அமைச்சர் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள விகாரைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) இம்மாவட்டத்தின் பின்தங்கிய கிராமங்களில் அமைந்துள்ள விகாரைகளில் பெருமளவு குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) மேற்படி விகாரைகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்காக இன்றளவில் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இலங்கையில் தொல்லியல் இடங்கள் அழிக்கப்படுவதற்கு எதிராக மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

1404/2021

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் காணப்படும் உள்நாட்டு நெல் வகைகளின் பெயர்கள்;

(ii) இலங்கைக்கு மாத்திரம் தனித்துவமான உள்நாட்டு நெல் வகைகளின் பெயர்கள்;

யாவையென்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பாரம்பரிய நெல் வகைகளைப் பயிரிடுவதற்கு உரம் மற்றும் விவசாய இரசாயனப் பொருட்கள் தேவையில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) பாரம்பரிய நெல் வகைகளைப் பேணுவதற்கும் பயரிடுவதற்கும் மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) தற்போது இலங்கையில் சிறுநீரகநோய் மற்றும் புற்றுநோய் என்பன அதிகமாக காணப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஈ) மரபணு மாற்றப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ள இலங்கைக்கு தனித்துவம் அல்லாத நெல் மற்றும் விதை வகைகளின் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற உணவுகளைப் பயன்படுத்துவது இதற்கு பிரதான காரணமாக அமைந்துள்ளதென ஆராய்ச்சிகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா என்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

4.

1421/2021

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கோட்டே ஸ்ரீ ஜயவர்தனபுர வித்தியாலயத்தில் (ஆண்கள்) முதலாவது 'ஸ்மார்ட் வகுப்பறை' முன்னோடிக் கருத்திட்டம் 2017.01.13 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது என்பதையும்;

(ii) அன்றிலிருந்து, இந்த முன்னோடிக் கருத்திட்டத்தை விஸ்தரிப்பதற்காக நிதி ஒதுக்கப்பட்டது என்பதையும்;

(iii) மேற்படி பாடசாலைக்கு அனைத்து தரங்களுக்குமான 'ஸ்மார்ட் வகுப்பறைகளை' நிறுவ முடிந்தது என்பதையும்;

(iv) ஏனைய பாடசாலைகளும் அரசாங்க நிறுவனங்களும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் விளைவுகளை மதிப்பீடு செய்துள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) குறிப்பிடப்பட்ட பாடசாலையில் உள்ள தரங்கள், வகுப்புகள் மற்றும் 'ஸ்மார்ட் வகுப்பறைகளுக்கு' சேர்க்கப்பட்ட மாணவர்களை வெவ்வேறாகவும்;

(ii) இந்தப் பாடசாலையில் 'ஸ்மார்ட் வகுப்பறைகளை' விஸ்தரிப்பதற்கான திட்டங்களையும்;

(iii) இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கப்படும் நிதியின் அளவையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) 2022 ஆம் ஆண்டில் மேற்படி பாடசாலை அதன் 200 ஆவது ஆண்டுநிறைவு விழாவை கொண்டாடும் போது அதனை ஒரு தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தி இலங்கையின் முதலாவது ஸ்மார்ட் பாடசாலையாக மாற்ற முடியுமா என்பதையும் அவர் மேலும் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5.

2265/2021

கௌரவ வசந்த யாப்பாபண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யட்டிநுவர பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கிராகம பிரதேசத்தில் அழகியற் கல்வி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியொன்று அமைந்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இக்கல்லூரிக்குச் சொந்தமான காணியின் அளவு மற்றும் கட்டிடங்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) இற்றைக்கு 20 ஆண்டுகளுக்கு முன்னர் இக்கல்லூரியில் கல்வி பயின்ற ஆசிரிய மாணவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) தற்சமயம் மேற்படி கல்லூரியில் பயிலும் ஆசிரிய மாணவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இன்றளவில் மேற்படி கல்லூரி பயன்படுத்தப்படாத நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனின், இங்கு பாடசாலையொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) இன்றேல், மேற்படி வளவு மற்றும் கட்டிடங்கள் தொடர்ந்தும் கைவிடப்பட்ட நிலையில் விடப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — (ஒதுக்கப்பட்ட ஒன்பதாவது நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, நவம்பர் 23)

* 2.

பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை (2013),— 1980 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்டு, 1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 32(1) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் கீழ் 2018.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான 2013 ஆம் ஆண்டிற்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2020.01.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2020.02.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 3.

பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை (2014),— 1980 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்டு, 1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 32(1) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் கீழ் 2018.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான 2014 ஆம் ஆண்டிற்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2020.01.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2020.02.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 4.

வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கைகள் (2013 மற்றும் 2014),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2019.03.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 மற்றும் 2014.12.31 ஆம் திகதிகளில் முடிவடைந்த வருடங்களுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கைகள் அங்கீகரிக்கப்படுமாக.

(சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2020.01.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2020.02.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 5.

வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2018.10.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான 2015 ஆம் ஆண்டிற்கான இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2020.01.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2020.02.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 6.

வெகுசன ஊடக அமைச்சர்,— த அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட்டின் ஆண்டறிக்கை (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2019.06.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான 2016 ஆம் ஆண்டிற்கான த அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட்டின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2020.01.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2020.02.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 7.

வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குக்கூற்று (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2019.02.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான 2015 ஆம் ஆண்டிற்கான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குக்கூற்று அங்கீகரிக்கப்படுமாக.

(சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2020.01.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2020.02.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 8.

வெகுசன ஊடக அமைச்சர்,— செலசினே ரூபவாஹினி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2019.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான 2016 ஆம் ஆண்டுக்கான செலசினே ரூபவாஹினி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2020.01.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2020.02.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 9.

போக்குவரத்து அமைச்சர்,— தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவின் கீழ் 2019.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான 2016 ஆம் ஆண்டிற்கான தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2020.02.05 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2020.02.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 10.

தொழில் அமைச்சர்,— ஊழியர் சேமலாப நிதியத்தின் ஆண்டறிக்கை (2016),— 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 6(3)(4) ஆம் பிரிவின் கீழ் 2019.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2016.12.31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான 2016 ஆம் ஆண்டிற்கான ஊழியர் சேமலாப நிதியத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2019.11.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2020.01.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 11.

தொழில் அமைச்சர்,— தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை (2013),— 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, வாழ்க்கைத் தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரத்திற்கான தேசிய நிறுவகச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் 2016.10.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான 2013 ஆம் ஆண்டிற்கான தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2019.11.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2020.01.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 12.

தொழில் அமைச்சர்,— தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை (2016),— 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, வாழ்க்கைத் தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரத்திற்கான தேசிய நிறுவகச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் 2019.01.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான 2016 ஆம் ஆண்டிற்கான தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2019.11.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2020.01.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 13.

தொழில் அமைச்சர்,— தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை (2017),— 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, வாழ்க்கைத் தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரத்திற்கான தேசிய நிறுவகச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் 2019.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2017.12.31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான 2017 ஆம் ஆண்டிற்கான தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2019.11.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2020.01.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 14.

சுற்றுலாத்துறை அமைச்சர்,— குடியியல் வான்செலவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 117(2)(ட) ஆம் பிரிவின் கீழ் சுற்றுலாத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2020 செப்தெம்பர் 08 ஆம் திகதிய 2192/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர்,— தாவர, விலங்கினப் பாதுகாப்புச் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புச் கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் கீழ் வனசீவராசிகள் பாதுகாப்பு, மின்சாரவேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் மற்றும் காடு மீள்வளர்ப்பு அத்துடன் காட்டு வள அபிவிருத்தி உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கடைப்பிடித்தல் இராஜாங்க அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 ஏப்ரல் 09 ஆம் திகதிய 2222/62 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

கடற்றொழில் அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61(1)(தஅ) மற்றும் (தஆ) ஆம் பிரிவுகளின் கீழ் கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2019 யூன் 03 ஆம் திகதிய 2126/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

கடற்றொழில் அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61(1)(ப) ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2021 மார்ச் 12 ஆம் திகதிய 2218/64 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

கைத்தொழில் அமைச்சர்,— தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 14(1)(ஊ) மற்றும் 15 ஆம் பிரிவுடன் உடன் வாசிக்க வேண்டிய, 53 ஆம் பிரிவின் கீழ் இரத்தினக்கல் மற்றும் ஆபரண உரிமக் கட்டணம் தொடர்பில் கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 மார்ச் 02 ஆம் திகதிய 2165/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் அச்சுப் பிழைகள் திருத்தப்பட்டு, 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 53 இன் கீழ் கைத்தொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2021 ஏப்ரல் 01 ஆம் திகதிய 2221/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.06.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

நீதி அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 45(1அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 61 ஆம் பிரிவின் கீழ் நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2021 மே 03 ஆம் திகதிய 2226/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 20.

பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— இலங்கைத் தொலைத்தொடர்புகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 5(ஊ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 71(2)(அ) ஆம் பிரிவின் கீழ், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2019 ஆகஸ்ட் 02 ஆம் திகதிய 2134/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.11.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 21.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.1),— திருத்தப்பட்டவாறான, மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 8 மற்றும் 30 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 32 ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2021 யூன் 30 ஆம் திகதிய 2234/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.11.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 08/2021)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 22.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.2),— திருத்தப்பட்டவாறான, மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 8 மற்றும் 30 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 32 ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2021 ஆகஸ்ட் 16 ஆம் திகதிய 2241/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.11.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 09/2021)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 23.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— திருத்தப்பட்டவாறான,1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3இ ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 ஆகஸ்ட் 03 ஆம் திகதிய 2239/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.11.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 24.

நிதி அமைச்சர்,— துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3(3) ஆம் பிரிவின் கீழ், துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பாக நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2021 ஆகஸ்ட் 11 ஆம் திகதிய 2240/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.11.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 25.

நிதி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1), 6 மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2021 ஒக்டோபர் 12 ஆம் திகதிய 2249/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.11.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 26.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 27.

மஹபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 28.

ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடிகளைத் தடைசெய்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 29.

நீதித்துறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 30.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2021 யூலை 08) [1].

* 31.

நிதி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 மே 06 ஆம் திகதிய 2226/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.06.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 32.

பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— 2015 சனவரி மாதம் 08 ஆம் திகதியிலிருந்து 2019 நவம்பர் மாதம் 16 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் பதவி வகித்த அரசாங்க உத்தியோகத்தர்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள், முப்படையினர் மற்றும் பொலிஸ் சேவை உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கு இடம்பெற்றுள்ளதாக கூறப்படும் அரசியல் ரீதியிலான பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்ந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் செயற்படுத்துதல்,—

மேற்குறித்த விடயம் சம்பந்தமாக அதிமேதகு சனாதிபதி அவர்களினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 2021.01.15 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு ஏற்புடைய அமைப/21/0105/301/003 ஆம் இலக்க, 2021.02.15 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு ஏற்ப பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது:—

(அ) சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை (அதன் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தொகுதிகளையும், எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பையும் உள்ளடக்கிய) பிரேரணை அங்கீகாரமொன்றினூடாக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்;

(ஆ) அந்த இறுதி அறிக்கையின் முதலாம் தொகுதியின் 08 ஆம் இலக்க விடயத்தின் கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஊழல் எதிர்ப்புக் குழு சம்பந்தமாக அந்த ஆணைக்குழுவினால் செய்யப்பட்டுள்ள தீர்மானங்களையும், சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தல்;

(இ) குறித்த 08 ஆம் இலக்க விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1 ஆம் இலக்கத் தீர்மானம் மற்றும் 1 ஆம் இலக்க சிபாரிசு என்பவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றினை நியமித்தல் அல்லது பாராளுமன்றத்தினால் அதற்காக விதித்துரைக்கப்படும் பிற பொருத்தமான வழிமுறையொன்றினை மேற்கொள்ளுதல்;

(ஈ) மேற்குறித்த விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தொகுதிகளில் மற்றும் அந்த இறுதி அறிக்கையின் எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பில் 08 ஆம் இலக்க விடயத்திலும் 09 ஆம் இலக்க விடயத்தில் I முதல் LXI வரையிலுமுள்ள முறைப்பாடுகளுக்கு உரியதாக அந்த ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தும் பொருட்டு, இந்த தீர்மானங்கள் மற்றும் சிபாரிசுகளை இலஞ்ச அல்லது ஊழல் முறைப்பாடுகள் பற்றி புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவுக்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் உரிய அமைச்சுக்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் உரிய அதிகாரிகளுக்கும் அனுப்புதல்; மற்றும்

(உ) குறித்த இறுதி அறிக்கையின் மூன்றாம் தொகுதியில் 10 ஆம் இலக்க விடயத்தின் கீழ் குறிப்பிடப்படும் முறைப்பாடுகளுக்கு உரியதாக குறித்த சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தல்

அதற்கேற்ப, மேலே (இ) இல் குறிப்பிடப்பட்டவாறு 2221/54 ஆம் இலக்க, 2021.04.01 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி ஊடாக அதிமேதகு சனாதிபதி அவர்களினால் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமையினால், மேற்குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் உள்ளடங்கியுள்ள 08 ஆம் இலக்க விடயத்தின் தீர்மானங்கள் மற்றும் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக விசேட சனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை கிடைத்த பின்பு கருத்திற்கொள்வதற்கு உட்பட்ட வகையில் குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்ந்து தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் (அதன் முதலாம், இரண்டாம், மூன்றாம் தொகுதிகளையும் எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பினையும் உள்ளடக்கிய) 08 ஆம் இலக்க விடயத்தைத் தவிர்த்து 09 மற்றும் 10 ஆம் இலக்க விடயங்களில் உள்ளடங்கியுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் மேலே (ஈ) மற்றும் (உ) இல் குறிப்பிடப்பட்டவாறு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்ற பிரேரணை நிறைவேற்றுமாக.

33.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

"ஒதுக்கீடு" எனும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் "தினப்பணிக்கான அனுபந்தம்" எனும் தனியிதழிற் பார்க்க.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.